சார்பு நீதிமன்றம், பெருந்துறை

MCOP No: 299/2019

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

ம.சா. 1(பிரேமலதா) நாள் 21.08.2025

முதல் விசாரணை தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகசர் | ம.சா.ஆ.3 |
| 4. | காயச்சான்றிதழ் | ம.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இரு சக்கர வாகனம்) | ம.சா.ஆ.5 |
| 6. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ( பிக்அப் வாகனம்) | ம.சா.ஆ.6 |
| 7. | இறுதியறிக்கை | ம.சா.ஆ.7 |
| 8. | குற்றவியல் வழக்கில் ஏற்பட்ட முடிவு | ம.சா.ஆ.8 |
| 9. | மருத்துவமனை கட்டண ரசீதுகள் ரூ352640/- (ஆட்சேபணையுடன்) | ம.சா.ஆ.9 |
| 10. | மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் | மசாஆ 10 |
| 11 | மருத்துவ பரிசோதணை அறிக்கை | மசாஆ 11 |
| 12 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | மசாஆ 12 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் இரு சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபரின் ஓட்டுநர் உரிமம், மேற்படி வாகனத்தின் காப்பீட்டு சான்று அமலில் உள்ளது. நான் பயணம செய்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் காரணம் என்றும் 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் காரணமல்ல என்றால்

சரியல்ல. நான் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரிதான். நான் தலைக் கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் நிரந்தர ஊனம் இல்லை என்றும், காயங்கள் முழுமையாக குணமடைந்து விட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை கட்டண ரசீதுகளில் மருந்துகளுக்கான மருத்துவர் பரிந்துரை சீட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்கும் மருத்துவ கட்டண ரசீதுகளுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. மருத்துவ பில்களை மனுவிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விபத்தினால் நிரந்தர ஊனமோ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS